EVERWIN MATRIC. HR. SEC. SCHOOL

STD: XII Holiday Material

தமிழ்

Note: Based on the given material, a special test will be conducted in the 1st week of June.

செய்யுள்: இளந்தமிழே

-சிற்பி.பாலசுப்பிரமணியம்

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. 'இளந்தமிழே' - என்ற தலைப்பில் அமைந்த பாடலின் ஆசிரியர் யார்?
   அ) சிற்பி.பாலசுப்பிரமணியம் ஆ) சுரதா இ) கவிக்கோ ஈ) கபிலர்
2. 'இளந்தமிழே' என்ற தலைப்பிட்ட பாடல் எந்தக் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
   அ) இது எங்கள் கிழக்கு ஆ) சூரிய ஒளி இ) நிலவுப் பூ ஈ) விண்மீன்கள்
3. 'சிற்பி.பாலசுப்பிரமணியம்' - சரியான இணையை எழுதுக.
   அ) கவிஞர்-நடிகர் ஆ) பேராசிரியர்-பாடகர்
   இ) மொழிபெயர்ப்பாளர்-இயக்குநர் ஈ) இதழாசிரியர்-கவிஞர்
4. சிற்பி.பாலசுப்பிரமணியின் எந்த நூலுக்குச் 'சாகித்திய அகாதெமி விருது' கிடைத்துள்ளது?
   அ) சூரிய நிழல் ஆ) ஒரு கிராமத்து நதி இ) ஒளிப்பறவை ஈ) அலையும் சுவடும்
5. சங்கம் வைத்து, தமிழை வளர்த்த மன்னர் எம்மன்னர்கள்?
   அ) பாண்டியர்கள் ஆ) பல்லவர்கள் இ) சேரர்கள் ஈ) சோழர்கள்
6. முல்லைக்குத் தேர் அளித்த வள்ளல் யார்?
   அ) குமண வள்ளல் ஆ) பாரி வள்ளல் இ) கர்ண வள்ளல் ஈ) தருமன்
7. ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த மன்னன் யார்?
   அ) கபிலர் ஆ) கம்பர் இ) பரணர் ஈ) அதியமான்
8. மயிலுக்குப் போர்வை அளித்த மன்னன் யார்?
   அ) பேகன் ஆ) தொண்டைமான் இ) நரசிம்மவர்மன் ஈ) மாமல்லன்
9. சிவபெருமானுக்கு நீல ஆடையை ஈந்தவன் யார்?
   அ) ஆய் அண்டிரன் ஆ) நந்திவர்மன் இ) குலசேகரன் ஈ) குலோத்துங்கன்
10. 'முத்தமிழ்' - என்ற இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு எழுதுக.
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

தன்னேர் இலாத தமிழ்

தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

11. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?
   அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு
12. அணி இலக்கணம் கூறும் நூல், ________
   அ) தண்டியலங்காரம் ஆ) நன்னூல் இ) காரிகை ஈ) சதுரகராதி
13. தண்டியலங்கார நூலின் ஆசிரியர், ________
   அ) பவணந்தி முனிவர் ஆ) வீரமா முனிவர் இ) தண்டி ஈ) காரியாசன்
14. தண்டியின் காலம் ________ ஆம் நூற்றாண்டு.
   அ) கி.பி.10 ஆ) கி.பி.12 இ) கி.பி.9 ஈ) கி.பி.11
15. தண்டியலங்காரம் ________ பெரும் பிரிவுகளை உடையது.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
16. 'தண்டியலங்காரம்' பாடலின் பாவகை________ .
   அ) சிந்தியல் வெண்பா ஆ) தேரிசை வெண்பா இ) நேரிசை வெண்பா ஈ) இன்னிசை வெண்பா
17. உவமையைக் கூறி உவமேயத்தைப் பெற வைக்கும் அணி, ________.
   அ) பிறிது மொழிதல் அணி ஆ) வேற்றுமை அணி
   இ) இல்பொருள் உவமை அணி ஈ) உருவக அணி
18. இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையைக் கூறிப் பின் வேறுபடுத்துவது, ________ அணி.
   அ) உவமை ஆ) எடுத்துக்காட்டு உவமை இ) வேற்றுமை ஈ) தற்குறிப்பேற்ற
19. ________ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது தண்டியலங்காரம் ஆகும்.
   அ) காவியதர்சம் ஆ) மகாகாவியம் இ) பிரகஸ்தம் ஈ) ரூபாவதி
20. பொதிகை மலையில் தோன்றிய மொழி ________.
   அ) துளு ஆ) தமிழ் இ) தெலுங்கு ஈ) வடமொழி

துணைப்பாடம்

21. வம்சமணி தீபிகை எனும் நூலை வெளியிட்டவர் யார்?
   அ) சங்கரதாஸ் சுவாமிகள் ஆ) தயானந்த சரஸ்வதி
   இ) சுத்தானந்த பாரதி ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்
22. இளசைமணி என்பவரால் மறுபதிப்பாக வெளியிடப்பட்ட நூல்?
   அ) அம்பிகாபதி ஆ) சீவக சிந்தாமணி இ) தண்டியலங்காரம் ஈ) வம்சமணி தீபிகை
23. வெங்கடேச எட்டப்பருக்கு 6.8.1919இல் கடிதம் எழுதியவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) கம்பதாசன்
24. வம்சமணி தீபிகை யாருடைய வரலாற்றை விவரிக்கிறது?
   அ) குறுநில மன்னர்கள் பரம்பரை ஆ) மூவேந்தர்கள் பரம்பரை
   இ) எட்டயபுர மன்னர்களின் பரம்பரை ஈ) பல்லவ மன்னர்கள் பரம்பரை
25. வம்சமணி தீபிகை மூலவடிவம் மறுபதிப்பாக வெளியிடப்பட்ட ஆண்டு ________.
   அ) 2008 ஆ) 2007 இ) 2006 ஈ) 2005

26. பரலி சு.நெல்லையப்பர் பதிப்பிக்காத பாரதியின் பாட்டு ________.
அ) கண்ணன் பாட்டு ஆ) குயில் பாட்டு இ) பாப்பா பாட்டு ஈ) முரசுப்பாட்டு

27. பாரதி துணையாசிரியராக இல்லாத இதழ்
அ) சூர்யோதயம் கர்மயோகி ஆ) லோகோபகாரி இ) இந்தியா, விஜயா
ஈ) தேசபக்தன்

28. வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ________.
அ) ஆனிலையப்பர் ஆ) கண்ணப்பர் இ) பரலி சு.நெல்லையப்பர் ஈ) அப்பர்

29. நாட்டுப்பாட்டு, முரசுப்பாட்டு ஆசிரியர் ________.
அ) கண்ணதாசன் ஆ) தாராபாரதி இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

30. நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களை எழுதியவர் யார்?
அ) பரலி சு.நெல்லையப்பர் ஆ) வாணிதாசன் இ) சிற்பி பாலசுப்ரமணியம்
ஈ) அப்துல் ரகுமான்

31. மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் எந்த நூலில் இடம்பெற்றிருக்கிறது?
அ) தாகூரின் கடிதங்கள் ஆ) நேருவின் கடிதங்கள்
இ) பாரதி கடிதங்கள் ஈ) மேனகாவின் கடிதங்கள்

32. மகாகவி பாரதி மறைவிற்கு முன் எழுதிய கடிதம் ________.
அ) நெல்லையப்பருக்கு ஆ) பாரதிதாசனுக்கு இ) மு.மேத்தாவிற்கு
ஈ) குந்திகேசவருக்கு

33. பாரதி தன் தம்பியாக எண்ணியது யாரை?
அ) பரலி சு.நெல்லையப்பர் ஆ) நந்திதேவர் இ) நகுலன் ஈ) சுரதா

34. பாரதியாரைவிட பரலி சு.நெல்லையப்பர் எத்தனை வயது இளையவர்?
அ) நான்காண்டுகள் ஆ) ஐந்தாண்டுகள் இ) ஆறாண்டுகள்
ஈ) ஏழாண்டுகள்

35. மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதத்தைப் பதிப்பித்தவர் யார்?
அ) ரா.அ.பத்மநாபன் ஆ) சீனிவாசன் இ) ரெங்கநாதன் ஈ) இராமானுஜம்

36. பாரதி பதினைந்து வயதில் கல்வி கற்க உதவ வேண்டி யாருக்குக் கடிதம் எழுதினார்?
அ) ஆங்கிலேயருக்கு ஆ) எட்டயபுர அரசருக்கு இ) பாண்டிய மன்னனுக்கு
ஈ) பல்லவ மன்னனுக்கு

## இனிக்கும் இலக்கணம்

37. உயிரெழுத்துகள் ________ வகைப்படும்.
அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஆறு

38. உயிர்மெய்க் குறில் எழுத்துகள் மொத்தம் ________.
அ) 25 ஆ) 70 இ) 90 ஈ) 30

39. உயிர்மெய் நெடில் எழுத்துகள் மொத்தம் ________.
அ) 126 ஆ) 136 இ) 140 ஈ) 110

40. 'ந, ண, ன, ற, ர, ல, ள, ழ' - எனும் எட்டு எழுத்துகளில் ________ மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும்.
அ) ர கரம் ஆ) ழ கரம் இ) நகரம் ஈ) லகரம்

41. மெய்யெழுத்துகள் ________ வகைப்படும்.
அ) ஐந்து ஆ) மூன்று இ) இரண்டு ஈ) நான்கு

42. 'க்ரீடம்'- எம்மொழிச் சொல்?
அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) வடமொழி ஈ) இலத்தீன்

43. 'சொற்றுணை' என்பதன் பிரிப்புமுறை ________.
அ) சொல்+றுணை ஆ) சொற் +றுணை இ) சொற் +துணை
ஈ) சொல் +துணை

44. எழுதுகிறபோது பிழைகளைத் தவிர்க்கும் முறை என்பது ________ எழுதுவதாகும்.
அ) சொல் உருவாகும் முறையை அறிந்து
ஆ) பொருள் வேறுபாட்டினை உணர்ந்து
இ) சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும்
ஈ) இவை இரண்டும் தவறு

45. ஈரொற்றாய் மட்டுமே வரும் ஒற்றுகள் ________.
அ) ய், ர், ழ் ஆ) ஞ், ந், வ் இ) ல், வ், ழ் ஈ) இவை அனைத்தும் தவறு

46. ________ மெய்யோடு சொல் முடியாது.
அ) மெல்லின ஆ) இடையின இ) வல்லின ஈ) இவை மூன்றும் சரி

## இயல்-1

இலக்கணக்குறிப்பு:
1. செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம் - பண்புத்தொகைகள்
2. முத்துமுத்தாய் - அடுக்குத்தொடர்
3. சிவந்து - வினையெச்சம்
4. வியர்வை வெள்ளம் - உருவகம்
5. வெங்கதிர் - பண்புத்தொகை
6. உயர்ந்தோர் - வினையாலணையும் பெயர்
7. இலாத - இடைக்குறை

பகுபத உறுப்பிலக்கணம்:

1. சாய்ப்பான் - சாய் + ப் + ப் + ஆன்
சாய் - பகுதி
ப் - பகுதி
ப் - எதிர்கால இடைநிலை
ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

2. விம்முகின்ற - விம்மு + கின்று + அ
விம்மு- பகுதி
கின்று - நிகழ்கால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

3. வியந்து - விய + த்(ந்) + த் + உ
விய - பகுதி
த் - சந்தி, ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

4. இருந்தாய் - இரு + த்(ந்) + த் + ஆய்

இரு - பகுதி

த் - சந்தி, ந் - ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

5. உயர்ந்தோர் - உயர் + த்(ந்) + த் + ஓர்

உயர் - பகுதி

த் - சந்தி, ந் - ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

6. விளங்கி - விளங்கு + இ

விளங்கு - பகுதி

இ - வினையெச்ச விகுதி

7. வந்து - வா(வ) + த்(ந்) + த் + உ

வா - பகுதி, 'வ' எனக் குறுகியது விகாரம்

த் - சந்தி, த் ' ந் ' - ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

புணர்ச்சி விதி:

1. செம்பரிதி - செம்மை + பரிதி

விதி: ஈறுபோதல் - செம் + பரிதி - செம்பரிதி

2. வானமெல்லாம் - வானம் + எல்லாம்

விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - வானமெல்லாம்

3. உன்னையல்லால் - உன்னை + அல்லால்

விதி: இ ஈ ஐ வழி யவ்வும் - உன்னை + ய் + அல்லால்

விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - உன்னையல்லால்

4. செந்தமிழே - செம்மை + தமிழே

விதி: ஈறுபோதல் - செம் + தமிழே

விதி: முன்னின்ற மெய்திரிதல் - செந்தமிழே

5. ஆங்கவற்றுள் - ஆங்கு + அவற்றுள்

விதி: உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் - ஆங்க் + அவற்றுள்

விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - ஆங்கவற்றுள்

6. தனியாழி - தனி + ஆழி

விதி: இ ஈ ஐ வழி யவ்வும் - தனி + ய் + ஆழி

விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ___ தனியாழி

7. வெங்கதிர் - வெம்மை + கதிர்

விதி: ஈறுபோதல் - வெம் + கதிர்

விதி: முன்னின்ற மெய் திரிதல் - வெங்கதிர்

## உரைநடை

21. தி.சு.நடராசன் எழுதிய நூல் எது?

அ) பால் வீதி ஆ) தமிழ் அழகியல் இ) நேயர் விருப்பம்

ஈ) திருவள்ளுவ மாலை

22. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்

அ) மெய்ப்பொருள் நாயனார் ஆ) பாரதியார் இ) கண்ணதாசன்

ஈ) தி.சு.நடராசன்

23. காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடப்பது ________.

அ) குறிஞ்சித் திணை ஆ) முல்லைக் கலி இ) அகநானூறு

ஈ) அழகின் சிரிப்பு

24. 'நடைநவின்றொழுகும்' என்னும் சொல் _______ என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

அ) நன்னூல் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) குறுந்தொகை

25. மொழியின் தனிச்சிறப்புகளும், கையாளும் வகைமைகளும் கவிதையின் ________ அமைகிறது.

அ) உந்து சக்தியாக ஆ) பொருளாக இ) சிறப்பாக ஈ) மேன்மையாக

26. அகத்திணைகளையும் புறத்திணைகளையும் பாடற்பொருளாக கொண்டு வடிவமைந்துள்ளது ________.

அ) சங்க இலக்கியம் ஆ) இருண்டவீடு இ) நீலகேசி ஈ) சிலப்பதிகாரம்

27. தமிழர்களின் அழகுணர்வு ________ கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது.

அ) நகமும் சதையும் போல ஆ) மலரும் மணமும் போல

இ) இரவும் பகலும் போல ஈ) தாயும் தந்தையும் போல

28. ________ ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.

அ) சொல்வளம் ஆ) கருத்து வளம் இ) அணி வளம் ஈ) கற்பனை வளம்

29. போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர், ________.

அ) பாரதிதாசன் ஆ) கபிலர் இ) தி.சு.நடராசன் ஈ) செல்லப்பா

30. கிரேக்கம், வடமொழி முதலிய பிறமொழிகளைவிட ________ மொழிசார் கலையைத் திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது.

அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) மலையாளம் ஈ) கிரீக்